**பிப்ரவரி – 22**

# TNPSC துளிகள்

- இந்தியப் பிரதமர் உத்திரப் பிரதேசத்தின் வாரணாசியில் உள்ள டீசல் இயந்திரத் தொழிற்சாலையில் (Diesel Locomotive Works - DLW) டீசல் எரிபொருளிலிருந்து மின்சாரத்திற்கு மாற்றியமைக்கப்பட்ட முதலாவது இரயில் என்ஜினை கொடியசைத்துத் துவக்கி வைத்தார்.
- இலங்கையின் அனைத்து 25 மாவட்டங்களையும் சேர்ந்த 150 மாணவர்கள் இந்தியாவில் கல்வி பயில உதவும் பெருமைமிகு மகாத்மா காந்தி உதவித் தொகை வழங்கப் பெற்றனர்.
- தேசிய விருதுகளான பாரத ரத்னா, பத்ம விபூசன், பத்ம பூசன் மற்றும் பத்ம ஸ்ரீ ஆகியன இந்திய அரசியலமைப்பின் விதி 18(1) என்பதன் கீழ் உள்ள விளக்கத்திற்குப் பொருந்துவதால் அவற்றை விருது பெறுபவர்கள் தங்கள் பெயருக்கு முன் அடைமொழியாகவோ துணை மொழியாகவோ பயன்படுத்த முடியாது என மத்திய உள்துறை இணை அமைச்சர் கங்காராம் அஹிர் தெரிவித்திருக்கின்றார்.
- மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சரும் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சருமான சுரேஷ் பிரபு புது தில்லியில் SWAYATT எனும் அமைப்பை ஆரம்பித்து வைத்தார்.
    - இது அரசின் மின்னணு வணிகச் சந்தையின் (Government e Marketplace - GeM) மீது மின்னணுப் பரிமாற்றங்கள் மூலம் பெண்கள் மற்றும் இளைஞர்கள் மேம்பாட்டிற்கான துவக்க நிறுவனங்களை ஊக்குவிக்கும் ஒரு முயற்சியாகும்.

# தமிழ்நாடு செய்திகள்

## 18-வது இணையதள மாநாடு

- தமிழ் மொழியில் தகவல் தொழில்நுட்பத்திற்கான சர்வதேச மன்றமும் அண்ணா பல்கலைக் கழகமும் இணைந்து 18-வது இணையதள மாநாட்டை நடத்த முன் வந்திருக்கின்றன.
- இது 2019-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20 முதல் 22 தேதி வரை நடத்தப்படும்.
- இம்மாநாட்டின் கருத்துரு “தமிழ் இயந்திரவியல் மற்றும் மொழி செயலாக்கம்” என்பதாகும்.
- 17-வது உலகத் தமிழ் இணையதள மாநாடு கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு விவசாயப் பல்கலைக் கழகத்தில் “அறிவுசார் தமிழ் தேடுபொறிகள்” எனும் கருத்துருவுடன் நடைபெற்றது.

# தேசியச் செய்திகள்

## டாப்ச்சி பயிற்சி

- இந்திய ராணுவம் தனது பீரங்கிப் படையின் திறனை வருடாந்திர டாப்ச்சி பயிற்சியில் மிக லேசான எடை கொண்ட ஹௌவிட்சர்ஸ் மற்றும் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட ஆயுதத்தைத் தேடும் சுவாதி ரேடார் ஆகியவற்றைப் பயன்படுத்தி மெய்ப்பித்துக் காண்பித்தது.
- இந்த நிகழ்ச்சி நாசிக் அருகில் உள்ள தியோலாலி முகாமில் உள்ள மிகப்பெரிய துப்பாக்கிச் சுடும் படை தளத்தில் நடைபெற்றது.




- மேலும் இது உள்நாட்டுத் தயாரிப்பான மேம்படுத்தப்பட்ட இலகு ரக வானூர்தி, இலகு ரக தாக்குதல் வானூர்தி, சீத்தா மற்றும் சேத்தக் வானூர்தி உள்ளிட்ட கருவிகளின் வானப் பயணம் மற்றும் கண்காணிப்பு திறமைகள் ஆகியவற்றையும் சோதித்துக் காண்பித்தது.

## விண்வெளித் துறையின் கீழ் புதிய நிறுவனம்

- மத்திய அமைச்சரவை விண்வெளித் துறையின் கீழ் ஒரு புதிய நிறுவனத்தை ஏற்படுத்திட தனது ஒப்புதலை அளித்திருக்கின்றது.
- இது இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் மையங்களாலும் விண்வெளித் துறையால் ஏற்படுத்தப்பட்ட நிறுவனங்களாலும் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளை வணிக ரீதியாக பயன்படுத்திக் கொள்ளும்,

## அனைத்திற்குமான அவசர கால உதவி எண்

- மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கும் மத்திய பெண்கள் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் மேனகா காந்தியும் இணைந்து 15 மாநிலங்கள் / ஒன்றியப் பிரதேசத்திலும் மும்பை நகரத்திலும் பெண்கள் பாதுகாப்பு முன்னெடுப்பிற்கான அவசர கால பதிலளிப்பு ஆதரவு முறையை ஆரம்பித்து வைத்தனர்.





- 112 என்ற எண்ணானது காவல் (100), தீயணைப்பு (101), சுகாதாரம் (108), பெண்கள் பாதுகாப்பு (1090) மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு (1098) போன்றவற்றிற்கான உடனடி உதவிகளுக்கான சேவைகளை வழங்கிடும்.
- அமெரிக்காவில் உள்ள 911 என்ற எண்ணைப் போன்று இந்த ஒற்றை எண்ணானது அவசர கால சேவைகளுக்கான எண்ணாகும்.
- 16 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் பின்வருமாறு: ஆந்திரப் பிரதேசம், உத்தரகாண்ட், பஞ்சாப், கேரளா, மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், உத்திரப் பிரதேசம், தெலங்கானா, தமிழ்நாடு, குஜராத், புதுச்சேரி, லட்சத் தீவுகள், அந்தமான், தாத்ரா நாகர் ஹவேலி, டாமன் மற்றும் டையூ, ஜம்மு மற்றும் காஷ்மீர்.
- இந்த அவசர கால சேவைகளை அவசர கால பதிலளிப்பு ஆதரவு மையத்தின் (Emergency Response Support System - ERSS) இணைய தளத்தில் உள்ளீடு செய்வதன் மூலம் நேரடியாகவும் அணுகிட முடியும்.
- மத்திய உள்துறை அமைச்சகத்தால் வடிவமைக்கப்பட்ட 112 இந்தியா என்ற செயலியும் கூகுள் பிளே ஸ்டோரிலும் ஆப்பிள் ஸ்டோரிலும் வெளியிடப்பட்டது.
- மத்திய உள்துறை அமைச்சர், நிர்பயா நிதியின் கீழ் தமிழ்நாடு (சென்னை மற்றும் மதுரை), உத்தரப் பிரதேசம் (லக்னோ மற்றும் ஆக்ரா), மேற்கு வங்காளம் (கொல்கத்தா) மற்றும் மகாராஷ்டிரா (மும்பை) ஆகிய நான்கு மாநிலங்களில் உள்ள மாநில தடயவியல் ஆய்வு நிலையங்களில் ஒரு சிறப்புத் திட்டமாக 78.76 கோடி ரூபாய் மதிப்பில் டி.என்.ஏ. ஆய்வு நிலையங்களின் திறன்களை மேம்படுத்தும் திட்டத்தையும் அறிவித்தார்.

***பாலியல் துன்புறுத்தல்களுக்கான விசாரணையைப் பின்தொடரும் அமைப்பு***

- பாலியல் துன்புறுத்தல்களுக்கான விசாரணையைப் பின்தொடரும் அமைப்பையும் நகரப் பாதுகாப்பு கண்காணிப்பு அமலாக்க இணைய வாயிலையும் அரசு தொடங்கி வைத்தது.




- இது கற்பழிப்பு வழக்குகளில் இரண்டு மாதங்களில் விசாரணையை நிறைவுபடுத்திட நிகழ்நேரக் கண்காணிப்பு மற்றும் மேலாண்மையை மேற்கொண்டிட சட்ட அமலாக்க நிறுவனங்களுக்கு ஒரு நிகழ்நேர அமைப்பைக் கிடைக்கச் செய்வதற்கான அமைப்பாகும்.




- இது ஏற்கனவே நாட்டின் 15000 காவல் நிலையங்களில் உள்ள தகவல்களை அணுகிடும் குற்றம் மற்றும் குற்றச் செயல் கண்காணிப்பு வலையமைப்பு (Crime and Criminal Tracking Network and Systems - CCTNS) நடைமுறைகளின் பணிப் பளுவைக் குறைத்திடும்.


## 7-வது தேசிய புகைப்படக் கலை விருதுகள்

- மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை அமைச்சர் கர்னல் ராஜ்யவர்த்தன் ரத்தோர் 7-வது தேசிய புகைப்படக் கலை விருதுகளை வழங்கினார்.
- தொழில்நுட்பப் பிரிவிற்கான கருத்துரு பெண்களால் ஆன முன்னேற்றம் என்பதாகும். அதே வேளையில் தொழில்நுட்பமற்ற பிரிவிற்கான கருத்துருவானது இந்தியாவின் திருவிழாக்கள் மற்றும் பண்டிகைகள் என்பதாகும்.
- தேசிய புகைப்படக் கலை விருதுகளின் ஏழாவது பதிப்பு புதுதில்லியில் தேசிய ஊடக மையத்தில் நடத்தப்பட்டது.
- வெற்றியாளர்கள் பின்வருமாறு :
    - வாழ்நாள் சாதனையாளர் விருது – அசோக் தில்வாலி
    - ஆண்டிற்கான தொழில்நுட்ப புகைப்படக் கலைஞர் விருது – S.L. சாந்த குமார்
    - ஆண்டிற்கான தொழில்நுட்பமற்ற புகைப்படக் கலைஞர் விருது – குர்தீப் திமான்.

# சர்வதேசச் செய்திகள்

## மாசிடோனியாவின் மறுபெயரிடுதல்

- மாசிடோனியா என்று முன்பு அழைக்கப்பட்ட நாடு முறைப்படி அலுவல்பூர்வமாக தனது பெயரை வடக்கு மாசிடோனியா எனும் வகையில் தனது அண்டை நாடான கிரீஸ் நாட்டுடன் நிலவி வரும் நீண்டகாலப் பிணக்கைத் தீர்க்கும் விதமாக மாற்றியிருக்கின்றது.
- இந்த பால்கன் நாடு பல்கேரியா மற்றும் அல்பேனியா ஆகியவற்றுக்கு இடையே அமைந்திருக்கின்றது.




- இது முன்னாள் யுகோஸ்லேவியாவை விட்டு பிரிந்து வந்த நாடுகளுள் ஒன்றாகும். இந்நாடு 1991-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தனது சுதந்திரத்தை அறிவித்தது.
- கடந்த வருடமே ஒப்புக் கொள்ளப்பட்ட இந்த பெயர் மாற்றம் பிரீஸ்பா ஒப்பந்தம் என்பதின் கீழ் நடைமுறைக்கு வந்தது.

# பொருளாதாரச் செய்திகள்

## துவக்க நிறுவனங்களுக்கான விதிமுறைகள்


- துவக்க நிறுவனங்களுக்கு மிகப் பெருமளவில் நிவாரணம் அளித்திடும் வகையில் துவக்க நிறுவனங்களுக்கான ஏஞ்சல் வரி விதிமுறைகளைத் தளர்த்திட அரசு முடிவெடுத்து இருக்கின்றது.
- வருமானவரிச் சலுகைகளை துவக்க நிறுவனங்கள் பெற்றிட முதலீட்டு வரம்பு 10 கோடியிலிருந்து 25 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.
- முந்தைய 7 வருடங்கள் என்ற அளவிலிருந்து துவக்க நிறுவனத்திற்கான விதிமுறைகள் மாற்றப்பட்டு தற்போது அது பதிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து 10 வருட காலத்திற்கு துவக்க நிறுவனமாகக் கருதப்படும்.

- ஒரு துவக்க நிறுவனத்தின் ஆண்டு விற்றுமுதல் முன்பிருந்த 25 கோடிக்குப் பதிலாக 100 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டு துவக்க நிறுவனம் என்ற பிரிவாகக் கருதப்படுகின்றது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## ஆண்ட்பாட் இயந்திர மனிதன்

- தனது சுற்றுச்சூழலை ஆராயவும் புவியிடங்காட்டி (GPS) அல்லது வரைபடம் ஆகியவற்றின் உதவியில்லாமல் தனது வீட்டிற்கான வழியை அறியும் முதலாவது நடக்கும் இயந்திர மனிதனை வடிவமைத்துள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.
- தன்னியக்க வாகனங்களின் பயணத்திற்கான ஒரு புது வழியை இது ஏற்படுத்தியுள்ளது.
- இந்த ஆண்ட்பாட்டை வடிவமைப்பதற்காக பிரெஞ்சு தேசிய அறிவியல் ஆராய்ச்சி மையத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் மிகச் சிறந்த தனித்துவ பணியாளர்களான பாலைவன எறும்புகளிடமிருந்து ஊத்வேகத்தைப் பெற்று இதை வடிவமைத்துள்ளனர்.
- எறும்புகள் வெளி இடங்களில் தங்களை அறிவதற்காக சிதறடிக்கப்பட்ட ஒளி மற்றும் புறஊதாக் கதிர்வீச்சு ஆகியவற்றைப் பயன்படுத்துகின்றன.




- பாலைவன எறும்புகளின் தனித்துவ பயணத் திறன்களைப் போல், ஆண்ட்பாட் ரோபோட் புவியிடங்காட்டியின் உதவியில்லாமல் இடத்தை ஆராய அதன் தொழில்நுட்பம் அதற்கு உதவுகின்றது.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## லாரஸ் விளையாட்டு விருதுகள் – 2019

- பிப்ரவரி 18-ஆம் தேதியன்று மொனாக்கோவில் வழங்கப்பட்ட லாரஸ் விளையாட்டு விருதுகள் நிகழ்ச்சியில் முதல்நிலை வெற்றியாளர்கள் உலகின் முதல்நிலை டென்னிஸ் வீரரான நோவக் ஜோகோவிச் மற்றும் அமெரிக்க ஜிம்னாஸ்டிக் (உடற்பயிற்சி வல்லுநர்) வீரர் சியோன் பைல்ஸ் ஆவர்.





| Laureus Sports Award 2019 | | |
|---|---|---|
| **Category** | **Winner** | **Sport** |
| Sportsman of the Year | Novak Djokovic | Tennis |
| Sportswoman of the Year | Simone Biles | Gymnast |
| Comeback of the Year | Tiger Woods | Golf |
| Breakthrough of the Year | Naomi Osaka | Tennis |
| Sportsperson of the Year with disability | Henrieta Farkkasova | Skiing |
| Action Sportsperson of the Year | Chloe Kim | Snowboarding |
| Team of the Year | France football team | Football |
| Laureus Sporting Moment of the Year | Xia Boyu | |
| Exceptional Achievement Award | Eliud Kipchoge | Athletics |
| Lifetime Achievement Award | Arsene Wenger | Football |
| Spirit for Sport Award | Lindsey Vonn | Alpine Skiing |
| Sport for Good Award | Yuwa | Women's football in Jharkhand |

# முக்கிய தினங்கள்

## உலக சமூக நீதி தினம் – பிப்ரவரி 20

- ஒரு நாட்டின் மக்களுக்கிடையேயும் உலகில் நாடுகளுக்கிடையேயும் சம உரிமைகள் மற்றும் வாய்ப்புகளை மேம்படுத்திட பிப்ரவரி 20-ஆம் தேதி உலகம் முழுவதும் உலக சமூக நீதி தினமாக ஆண்டுதோறும் அனுசரிக்கப்படுகிறன்றது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபை இந்த தினத்தை 2007-ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் 26-ஆம் தேதி அங்கீகரித்தது. 2009-ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் சமூக நீதி தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- சமூக நீதியானது எவ்வாறு வறுமையை ஒழிப்பதிலும் வேலைவாய்ப்பை உயர்த்துவதிலும் சமூக ஒருங்கிணைப்பைக் கொண்டு வருவதிலும் செயலாற்றுகின்றது என்பதை மக்களிடையே ஊக்கப்படுத்துவதை இத்தினம் நோக்கமாகக் கொண்டிருக்கின்றது.




- 2019-ஆம் ஆண்டிற்கான உலக சமூக நீதி தினத்தின் கருத்துரு "நீங்கள் சமாதானத்தையும் வளர்ச்சியையும் விரும்பினால் சமூக நீதிக்காகப் பணியாற்றுங்கள்" என்பதாகும்.

# இதரச் செய்திகள்

## தேசிய உற்பத்தித் திறன் வாரம் – பிப்ரவரி 12 முதல் 18 வரை

- தேசிய உற்பத்தித் திறன் குழு 2019-ஆம் ஆண்டு பிப்ரவரி 12 முதல் 18 வரை தேசிய உற்பத்தித் திறன் வாரத்தைக் கொண்டாடுகின்றது.
- இந்த வருடத்திற்கான கருத்துரு "உற்பத்தித் திறன் மற்றும் நீடித்தத் திறனுக்காக சுற்றுவட்ட வடிவிலான பொருளாதாரம்" என்பதாகும்.
- இந்த கருத்துரு தேசிய உற்பத்தித் திறன் மன்றம் தனது சுழிய கழிவு இலக்கை அடைந்திட உதவிடும்.

### *தேசிய உற்பத்தித் திறன் குழு*

- இது மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறையின் கீழ் உள்ள தொழிற்கொள்கை மற்றும் மேம்பாட்டுத் துறையின் கீழ் ஒரு தன்னாட்சி கொண்ட பதிவு பெற்ற அங்கமாகும்.
- இது 1985-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.
- இதன் முதன்மையான செயல்பாடு இந்தியாவில் உற்பத்தித் திறனிற்கான ஒரு புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட கலாச்சாரத்தை ஊக்குவித்து ஏற்றுக் கொள்ளச் செய்வதாகும்.

- - - - - - - - - - - - - - -